2. தருமபுரி–கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தருமபுரியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மதுரை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தேனியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து தூத்துக்குடியை தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விழுப்புரம்–கடலூர் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திலிருந்து கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு புதிய பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒன்றியங்களைப் பிரிப்பதன் விளைவாக, ஆவின் மூலமாக கொள்முதல் செய்யப்படும் பால், நாளொன்றுக்கு 33 இலட்சம் லிட்டரிலிருந்து 35 இலட்சம் லிட்டராகவும், ஆவின் பால் விற்பனை 22.5 இலட்சம் லிட்டரிலிருந்து 25 இலட்சம் லிட்டராகவும் உயரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

4. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் பால் வளத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய மகத்தான சேவைக்கு மேலும் மணிமகுடமாக, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு, குறிப்பாக புற்றுநோய் சிகிச்சையிலே வளர்ந்த நாடுகளுக்கு இணையாக, காஞ்சிபுரம் மாவட்டம், காரப்பேட்டை, அரசு

அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவமனையில் புற்றுநோய்க்கான மேன்மைமிகு மையத்தினை 120 கோடி ரூபாயில் அமைத்திட அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நீண்டகாலக் கோரிக்கையாக, ஈரோடு மாவட்ட மக்களின் வயிற்றில் பால் வார்த்ததைப்போல, 67 கோடி ரூபாய்க்கு ஈரோடு அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையை Super Speciality Hospital–உயர் சிறப்பு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அறிவித்துள்ளார்கள்.

அதேபோன்று, இன்றைக்கு ஒரு புதிய முயற்சியாக, சென்னை, கே.கே. நகரில் உள்ள அரசு புனர்வாழ்வு மருத்துவமனையில் Rehabilitation Centre ஒன்று அறிவித்துள்ளார்கள். இதுபோன்ற Rehabilitation Centres வளர்ந்த நாடுகளில்தான் இருக்கும். பல்வேறு வசதிகளுடன்கூடிய மறுவாழ்வு மையம்–Rehabilitation Centre அமைக்கப்படும் என்ற ஒரு மகத்தான அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள். மேலும், அரசு மருத்துவமனைகளின் சேவையை மேலும் மேம்படுத்த 'My Hospital, My Pride' என்று அறிவித்துள்ளது ஒரு புதிய முயற்சி. இதுபோன்று பல்வேறு முயற்சிகளுக்கு இன்றைக்கு வித்திட்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மக்கள் நல்வாழ்வுத் துறையின் நெஞ்சார்ந்த நன்றிகளை அன்போடு காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஆண்டுகள் தமிழகத்தை ஆண்ட முத்தான முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வழிவந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். கழகத்தின் திலகம், எங்கள் கழகத்தை கலகமின்றி, களங்கமின்றி, கர்வமின்றி, கடினமின்றி காக்கின்ற காவல் தெய்வம் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்தையே உள்ளங்கையில் வைத்துள்ள கரும்பு தேசத்தின் இரும்பு மனிதர் எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) சிக்கல்கள் பல வந்தாலும் மக்களுக்குத் தொண்டாற்ற தவறாதவர்; அவர்களுக்கு சுமைகளைத் தராதவர்; எளியவர்களுக்கு நன்மை பல செய்பவர் எங்கள் அண்ணன் எடப்பாடியார். (மேசையைத் தட்டும் ஒலி) எளிமைதான் எங்கள் அண்ணன் எடப்பாடியாரின் வலிமை; அவர் இதயம் வெண்மை; தினம் மக்களுக்குச் செய்கிறார் நன்மை; அதைப் பார்த்து பலருக்கு பொறாமை; (மேசையைத் தட்டும் ஒலி) இதுவே உண்மை. தமிழை அடுக்குமொழியில் பேசி பிழைக்க வந்தவர் அல்ல எங்கள் முதல்வர்; தமிழர்களுக்காக மிடுக்காக உழைக்க வந்தவர் எங்கள் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–10

காவேரித் தாய் காத்துவந்த கழகத்தை, கண்ணின் மணியாகக் காத்து, களம் பல கண்டு, வெற்றிக்கனி பறிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுக்கு தோளோடு தோள் நின்று, ஒன்றுபட்ட கழகத்தை மீட்டெடுத்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ் அவர்களுக்கும், எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விதி 110–ன்கீழ் பால் வளத் துறைக்கு முத்தான அறிவிப்பான 5 புதிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களை அமைப்பதற்கு ஆணை பிறப்பித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு பால் வளத் துறையின் சார்பாகவும், எனது சார்பாகவும் எனது நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதனுக்கு 7 குணங்கள் உண்டு. அவற்றுள் 4, பழகினால் வருபவை; ஏனைய மூன்றும் மரபு வழி குணங்களாகும். அவை நட்பு, ஈகை, கருணை. இந்த மூன்று குணங்களையும் இயற்கையிலேயே ஒருங்கே பெற்றிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், போக்குவரத்துக் கழகங்கள் புத்துயிர் பெறுகின்ற வகையிலே,

2019 ஜூலை 17] *[திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]*

புதிய 2,000 பேருந்துகளை வாங்குவதற்கும் மற்றும் பொது மக்களுக்குப் பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்கின்ற வகையிலே, 10 பணிமனைகளைத் தரமுயர்த்தவும், விதி 110–ன்கீழ் அறிவித்தமைக்கு அனைத்துப் போக்குவரத்துக் கழக அலுவலர்கள் மற்றும் தொழிலாளர்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கவன ஈர்ப்பு

மடத்துக்குளம் தொகுதி, அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள், திரு. அர. சக்கரபாணி, திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

***திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதி, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இயந்திரங்கள் பழுதடைந்துள்ளது" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கொதிகலன் பழுதுபட்டிருந்தது. கொதிகலன் தற்சமயம் சீர்செய்யப்பட்டு, நல்லமுறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கொஞ்சம் இருங்கள்; என்னை அவை அலுவல்களை நடத்தவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30–3–2019 முதல். . . .*